THE HINDU
Region

# Jipmer trains first responders from rural areas

The Hindu Bureau
PUDUCHERRY

Jipmer has completed training a batch of first responders under the INDIA-EMS (Integrated Nationwide District-based Implementation Research for Emergency Model System) project of the National Health Research Priority (NHRP), Indian Council of Medical Research (ICMR).

The training was part of the INDIA-EMS initiative – 'One Responder, One Village' – aimed at training at least one first responder in every village to act promptly during medical emergencies and disasters, significantly improving golden-hour outcomes.

Jipmer conducted the comprehensive 'First Responder Training Programme' as a nodal centre and national implementation partner for INDIA-EMS, in collaboration with the district administration and the Directorate of Health and Family Welfare Services (DHFWS).

The Centre of Excellence (CoE) in Trauma and Burns, Jipmer served as the technical execution arm for the training, said a press note from Manu Ayyan, Principal Investigator, INDIA-EMS, and Associate Professor, Jipmer.

Inaugurating the programme, District Collector A. Kulothungan highlighted the importance of equipping local citizens with skills to handle mass casualty events and day-to-day emergencies. He appreciated the collaborative efforts in building a sustainable and community-based emergency response system.



A batch of first responders undergoing training as part of an ICMR programme.

Among those who addressed the workshop were S. Govindarajan, Mission Director (NHM), G. Raghunathan, Deputy Director (IEC) and R. Duraisamy, Nodal Officer, 108 Emergency Services.

The speakers emphasised the urgency of decentralising emergency medical training and strengthening the preparedness of communities across all regions.

The batch of 50 participants came from various villages and underwent hands-on training in CPR, choking relief, trauma management, bleeding control, cervical spine protection, and safe patient transport, using simulation-based stations led by trained faculty from INDIA-EMS and CoE-Jipmer.

S. Sooriyaprasannan, Research Scientist, INDIA-EMS (NHRP), ICMR, who along with Gloria, Scientist, INDIA-EMS, and Nodal Officer, Centre of Excellence in Trauma and Burns, Jipmer, underscored the importance of evolving a trained and responsive village-level workforce capable of initiating immediate life-saving action, the press note said.

THE NEW SUNDAY EXPRESS

# 'Jipmer milk bank feeds at least 20 pre-term babies a day'

PUDUCHERRY: At least 20 babies, especially pre-term, benefit every day from the human milk bank of Jipmer, 'Amudham Thaipaal Maiyam.' The facility successfully completes 10 years on July 13, according to Dr Adhisivam B, professor, Department of Neonatology.



While India's first human milk bank was established in Mumbai in 1989, the growth of such banks has not kept pace with the increasing number of neonatal intensive care units (NICUs) and pre-term births in the country, said Adhisivam. Nonetheless, the landscape is slowly changing, with nearly 100 human milk banks now operational across India, he said. Experts stress that greater public awareness and efforts to encourage voluntary milk donation are essential for strengthening this life-saving service.

"The bank has come a long way from its initial average voluntary donation of 400ml/day to the current 1,000 ml/day," Adhisivam said. *ENS*

இந்து தமிழ் திசை

# தாயை இழந்த குழந்தைகள் பயனடைய தாய்ப்பால் தானம் தர முன்வர வேண்டும்

## தாய்மார்களுக்கு ஜிப்மர் மருத்துவமனை வேண்டுகோள்

புதுச்சேரி

தாயை இழந்த, பால் கிடைக்காத குழந்தைகள் பயனடைய தாய்மார்கள் தாய்ப்பால் தானம் வழங்க முன்வர வேண்டும் என்று புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையின் பச்சிளம் குழந்தைகள் துறை கேட்டுக் கொண்டுள்ளது.

இது குறித்து அத்துறையின் பேராசிரியர் டாக்டர் ஆதிசிவம் கூறியதாவது:

ஜிப்மர் மருத்துவமனையில், 'அமுதம் தாய்ப்பால் மையம்' என்ற பெயரில் தாய்ப்பால் வங்கி 2016 ஜூலை 13-ம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டுகளாக இந்த தாய்ப்பால் வங்கி மூலம் பச்சிளம் குழந்தைகள் பலர் பயனடைந்துள்ளனர். இந்த தாய்ப்பால் வங்கி, ஜிப்மர் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையின் முதல் தளத்தில் பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவுக்கு அருகிலேயே செயல்பட்டு வருகிறது.

அதிக பிரசவங்கள் நடைபெறும் மருத்துவமனைகளில் தாய்ப்பால் வங்கியின் சேவை அளப்பரியது.

தாய்மார்களால் சில காரணங்களால் குழந்தைக்கு பால் கொடுக்க முடியாதபோது, தானமாக பெறப்பட்ட தாய்ப்பால் உதவுகிறது. கரோனா காலத்தில் கூட, தாய்ப்பால் வங்கி மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

தாய்ப்பால் வங்கி ஆரம்பித்தபோது, ஒரு நாளைக்கு 400 மில்லி தாய்ப்பால் சேகரிக்கப்பட்டது. தற்போது, ஒரு நாளைக்கு 1,000 மில்லி வரை சேகரிக்கப்படுகிறது.

தினமும் குறைந்தபட்சம் 20 குழந்தைகள் குறிப்பாக குறைமாத குழந்தைகள் இந்த தாய்ப்பால் வங்கியிலிருந்து அதிகம் பயன்பெறுகிறார்கள்.

இந்த 9 வருட சிறப்பான சேவைக்கு, தாய்ப்பால் தானம் கொடுக்கும் தாய்மார்களும், பச்சிளம் குழந்தைகள் பிரிவில் வேலை செய்யும் அனைத்து ஊழியர்களும் காரணமாவர். உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுறுத்தல்படி, முதல் 6 மாதங்களுக்கு குழந்தைக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும்.

ஏதோ ஒரு காரணத்தால், தாய் தன் குழந்தைக்கு நேரடியாக தாய்ப்பால் கொடுக்க முடியாதபோது அந்த அன்னையின் தாய்ப்பாலையே, கை அல்லது கருவி கொண்டு பீச்சி எடுத்து குழந்தைக்கு கொடுக்க வேண்டும்.

இதுவும் முடியாதபோது தாய்ப்பால் வங்கியிலிருந்து பெறப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட தாய்ப்பால் கொடுக்கலாம்.

தாய்ப்பால் வங்கியில் தாய்மார்களை நன்கு பரிசோதித்த பிறகே அவர்களிடம் இருந்து தாய்ப்பால் தானமாக பெறப்படுகிறது. தாய்ப்பாலை தகுந்த தட்பவெப்ப நிலையில் பதப்படுத்தி வைத்து, பிறகு சுத்திகரிப்பு செய்து கிருமித்தாக்கம் உள்ளதா என மீண்டும் பரிசோதித்து, அதன் பிறகே தேவைப்படும் பச்சிளம் குழந்தைக்கு கொடுக்கப்படுகிறது.

தாய்மார்களுக்கு எச்ஐவி மற்றும் மஞ்சள் காமாலை போன்ற கிருமிகள் தாக்கம் இருக்கக் கூடாது. நாட்டில் நிகழும் பிரசவங்களை கணக்கில் கொண்டால் தாய்ப்பால் வங்கிகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது.

இருப்பினும், கடந்த சில வருடங்களாக தாய்ப்பால் வங்கியின் எண்ணிக்கை அதிகரித்து தற்போது சுமார் 100 தாய்ப்பால் வங்கிகள் இந்தியாவில் செயல்படுகின்றன. தாய்ப்பால் வங்கி குறித்த விழிப்புணர்வு மக்களிடையே அதிகரிக்க வேண்டும். தாய்மார்களும் தாய்ப்பால் தானம் கொடுப்பதின் நன்மைகள் என்ன என்பதை அறிந்து கொண்டு சுயமாக தாய்ப்பால் தானம் தர முன்வர வேண்டும்.

பாலூட்டும் அன்னையர் அனைவரும் தாய்ப்பால் தானம் கொடுக்கலாம். தங்கள் குழந்தைக்கு கொடுத்தது போக, எஞ்சிய தாய்ப்பாலை வங்கிக்கு வழங்குவதால், தானம் செய்யும் அன்னைக்கு எந்த பிரச்சினையும் ஏற்படாது. மாறாக அவர்களுக்கு பால் சுரப்பது அதிகரிக்கும்.

நீங்கள் தானம் செய்யும் தாய்ப் பாலால் குறைமாத குழந்தைகளும், குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளும் பயனடைவார்கள். மேலும், தாயை இழந்த குழந்தைகள் அல்லது தாயிடமிருந்து தற்காலிகமாக பால் கிடைக்காத குழந்தைகள் ஆகியோரும் பயனடைவார்கள். தாய்ப்பால் கொடுப்பதும் பெறுவதும் அவரவர் சொந்த விருப்பத்தை பொறுத்தது. இதில் பணப்பரிமாற்றம் ஏதும் கிடையாது என்று தெரிவித்தார்.

Daily Thanthi Puducherry 13-7-2025

# தாய்ப்பாலை தானமாக கொடுக்க தாய்மார்கள் முன்வர வேண்டும்

## ஜிப்மர் டாக்டர் அறிவுறுத்தல்

புதுச்சேரி, ஜூலை.13-
தாய்ப்பாலை தானமாக கொடுக்க தாய்மார்கள் முன்வர வேண்டும் என்று ஜிப்மர் டாக்டர் அறிவுறுத்தி உள்ளார்.

### தாய்ப்பால் மையம்

புதுவை ஜிப்மர் ஆஸ்பத்திரியில் 'அமுதம் தாய்ப்பால் மையம்' என்ற பெயரில் தாய்ப்பால் வங்கி கடந்த 2016-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் 10-வது ஆண்டு தொடக்க விழா நேற்று நடந்தது. நிகழ்ச்சியில் ஜிப்மர் டாக்டர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து ஜிப்மர் பச்சிளம் குழந்தைகள் துறை பேராசிரியர் டாக்டர் ஆதிசிவம் கூறுகையில், தாய்ப்பால் வங்கி ஆரம்பித்தபோது ஒரு நாளைக்கு 400 மில்லி தாய்ப்பால் சேகரிக்கப்பட்டது. அது படிப்படியாக உயர்ந்து தற்போது நாள் ஒன்றுக்கு 1 லிட்டர் தாய்ப்பால் சேகரிக்கப்படுகிறது. இந்த தாய்ப்பாலை, குறை மாத குழந்தைகள், எடை குறைவாக பிறக்கும் குழந்தைகளுக்கு இந்த வங்கி வழங்கி வருகிறது. தினந்தோறும் சராசரியாக 30 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

### பரிசோதித்த பிறகே அனுமதி

உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுறுத்தல் படி குழந்தைகளுக்கு பிறந்தது முதல் குறைந்தது 6 மாதத்திற்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும். ஏதோ ஒரு காரணத்தால் தாய்ப்பால் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் கை அல்லது கருவி கொண்டு பீய்ச்சி எடுத்து தாய்ப்பால் கொடுக்கவேண்டும். அதுவும் முடியாத நிலை ஏற்பட்டால் தாய்ப்பால் வங்கியில் இருந்து பெறப்பட்ட பாலை கொடுக்கலாம். தானமாக கொடுக்க வரும் தாய்மார்களை நன்கு பரிசோதித்த பிறகே அவர்களிடம் இருந்து தாய்ப்பால் பெறப்படுகிறது. பாலூட்டும் தாய்மார்கள் அனைவரும் தாய்ப்பாலை தானமாக கொடுக்க முன்வர வேண்டும்' என்றார்.



ஜிப்மரில் சேகரிக்கப்பட்ட தாய்ப்பால் குளிர்பதன பெட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள காட்சி.

● Dinakaran ● Puducherry ● 13.7.2025

# ஜிப்மரில் தாய்ப்பால் கொடுப்பதற்கும், பெறுவதற்கும் பணம் கிடையாது

## மருத்துவர் தகவல்



▶ ஜிப்மரில் இயங்கி வரும் தாய்ப்பால் வங்கி.

புதுச்சேரி, ஜூலை 13: புதுச்சேரி பச்சிளம் குழந்தைகள் துறை பேராசிரியர் டாக்டர் ஆதிசிவம் கூறியதாவது: ஜிப்மர் மருத்துவமனையில் அமுதம் தாய்ப்பால் மையம் என்றபெயரில் தாய்ப்பால் வங்கி 2016 ஜூலை 13ம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது.

கடந்த 9 ஆண்டுகளாக இந்த தாய்ப்பால் வங்கி மூலம் பச்சிளம் குழந்தைகள் பலர் பயனடைந்துள்ளார்கள். இந்த தாய்ப்பால் வங்கி, ஜிப்மர் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையின் முதல் தளத்தில் பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவுக்கு அருகிலேயே செயல்பட்டு வருகிறது. அதிக பிரசவங்கள் நடைபெறும் மருத்துவமனைகளில் தாய்ப்பால் வங்கியின் சேவை அளப்பரியது. தாய்மார்களால் சில காரணங்களால் குழந்தைக்கு பால் கொடுக்க முடியாதபோது, தானமாக பெறப்பட்ட தாய்ப்பால் உதவுகிறது. கொரோனா காலத்தில் கூட, தாய்ப்பால் வங்கி மிகவும் பயனுள்ளதாக இருந்தது. தாய்ப்பால் வங்கி ஆரம்பித்தபோது, ஒரு நாளைக்கு 400 மில்லி தாய்ப்பால் சேகரிக்கப்பட்டது. தற்பொழுது, ஒரு நாளைக்கு 1,000 மில்லி வரை சேகரிக்கப்படுகிறது. தினமும் குறைந்தபட்சம் 20 குழந்தைகள் குறிப்பாக குறைமாத குழந்தைகள் இந்த தாய்ப்பால் வங்கியிலிருந்து அதிகம் பயன்பெறுகிறார்கள். தாய்ப்பால் வங்கி குறித்த விழிப்புணர்வு மக்களிடையே அதிகரிக்கவேண்டும். தாய்மார்களும் தாய்ப்பால் தானம் கொடுப்பதின் நன்மைகள் என்ன என்பதை அறிந்துகொண்டு சுயமாக தாய்ப்பால் தானம் தர முன்வர வேண்டும். தானம் செய்யும் அன்னைக்கு எந்த பிரச்னையும் ஏற்படாது. தாய்ப்பால் கொடுப்பதும், பெறுவதும் அவரவர் சொந்த விருப்பத்தை பொறுத்தது. இதில் பணப்பரிமாற்றம் ஏதும் கிடையாது. இவ்வாறு அவர் கூறினார்.

தினமணி விழுப்புரம் 3

# ஜிப்மர் அமுதம் தாய்ப்பால் மையம் 10-வது ஆண்டு விழா

**புதுச்சேரி, ஜூலை 12:** ஜிப்மர் அமுதம் தாய்ப்பால் மையம் 10-வது ஆண்டு சேவையில் அடியெடுத்து வைக்கிறது.

ஜிப்மர் மருத்துவமனையில் அமுதம் தாய்ப்பால் மையம் என்ற பெயரில் தாய்ப்பால் வங்கி 2016 ஜூலை 13 முதல் செயல்பட்டு வருகிறது. கடந்த பத்து ஆண்டுகளாக, இந்த தாய்ப்பால் வங்கி மூலம் பச்சிளம் குழந்தைகள் பலர் பயனடைந்துள்ளார்கள்.



புதுச்சேரி ஜிப்மர் அமுதம் தாய்ப்பால் மையம்.

இது ஜிப்மர் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையின் முதல் தளத்தில் பச்சிளம் குழந்தைகள் தீவிரசிகிச்சைப் பிரிவுக்கு அருகிலேயே செயல்பட்டு வருகிறது.

இந்த மையம் தொடங்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை 10 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பது ஜிப்மருக்குப் பெருமை சேர்ப்பதாக இருக்கிறது. மேலும், தன்னார்வலர்கள் பலர் விருப்பத்துடன் வர வேண்டும் என்கிறார் ஜிப்மர் மருத்துவமனையின் மக்கள் தொடர்பு அதிகாரி சிவக்குமார்.

தாய்ப்பால் நன்கு கொதிக்க வைக்கப்பட்டு பதப்படுத்தப்படுவதால் அதில் கிருமிகள் இருக்க வாய்ப்பில்லை. மேலும் சுத்திகரிக்கப்பட்ட தாய்ப்பால் பரிசோதிக்கப்பட்ட பிறகே குழந்தைக்கு வழங்கப்படுகிறது. தாய்ப்பால் கொடுப்பதும் பெறுவதும் அவரவர் சொந்த விருப்பத்தை பொறுத்தது. இதில் பணப்பரிமாற்றம் ஏதும் கிடையாது என்கிறார் ஜிப்மர் மருத்துவமனையின் பச்சிளம் குழந்தைகள் துறையின் பேராசிரியர் டாக்டர் ஆதிசிவம்.

தமிழ் முரசு
TAMIL MURASU
VOICE OF THE COMMUNITY

### தாயை இழந்த குழந்தைகளுக்காக

# தாய்மார்கள் தாமாக முன்வந்து தாய்ப்பால் தானம் தர வேண்டும்

## ஜிப்மர் மருத்துவர் வேண்டுகோள்



ஜிப்மரில் இயங்கி வரும் அமுதம் தாய்ப்பால் வங்கி.

புதுச்சேரி, ஜூலை 12-

புதுச்சேரி பச்சிளம் குழந்தைகள் துறை பேராசிரியர் டாக்டர் ஆதிசிவம் கூறியதாவது:

ஜிப்மர் மருத்துவமனையில் அமுதம் தாய்ப்பால் மையம் என்ற பெயரில் தாய்ப்பால் வங்கி 2016 ஜூலை 13ம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளாக இந்த தாய்ப்பால் வங்கி மூலம் பச்சிளம் குழந்தைகள் பலர் பயனடைந்துள்ளார்கள். கொரோனா காலத்தில் கூட, தாய்ப்பால் வங்கி மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

தாய்ப்பால் வங்கி ஆரம்பித்தபோது, ஒரு நாளைக்கு 400 மில்லி தாய்ப்பால் சேகரிக்கப்பட்டது. தற்பொழுது, ஒரு நாளைக்கு 1,000 மில்லி வரை சேகரிக்கப்படுகிறது. தினமும் குறைந்தபட்சம் 20 குழந்தைகள் குறிப்பாக குறைமாத குழந்தைகள் இந்த தாய்ப்பால் வங்கியிலிருந்து அதிகம் பயன்பெறுகிறார்கள். உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுறுத்தல்படி, முதல் ஆறு மாதங்களுக்கு குழந்தைக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும். தாய்ப்பாலை தகுந்த தட்பவெப்ப நிலையில் பதப்படுத்தி வைத்து, பிறகு சுத்திகரிப்பு செய்து கிருமித் தாக்கம் உள்ளதா என மீண்டும் பரிசோதித்து, அதன் பிறகே தேவைப்படும் பச்சிளம் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கப்படுகிறது.

1989ம் ஆண்டில் இந்தியாவின் முதல் தாய்ப்பால் வங்கி திறக்கப்பட்டது. தற்போது சுமார் 100 தாய்ப்பால் வங்கிகள் இந்தியாவில் செயல்படுகின்றன. பாலூட்டும் அன்னையர் அனைவரும் தாய்ப்பால் தானம் கொடுக்கலாம். தாய்ப்பால் வங்கியில் தாய்மார்கள் நன்கு பரிசோதிக்கப்பட்ட பின்னரே அவர்களிடமிருந்து தாய்ப்பால் பெறப்படுகிறது. குறிப்பாக அவர்களுக்கு எச்ஐவி மற்றும் மஞ்சள் காமாலை போன்ற கிருமிகள் தாக்கம் இருக்கக் கூடாது. தாய்மார்களிடமிருந்து பெறப்பட்ட தாய்ப்பால் நன்கு கொதிக்க வைக்கப்பட்டு பதப்படுத்தப்படுவதால் அதில் கிருமிகள் இருக்க வாய்ப்பில்லை. மேலும் சுத்திகரிக்கப்பட்ட தாய்ப்பால் பரிசோதிக்கப்பட்ட பிறகே குழந்தைக்கு வழங்கப்படுகிறது. இதில் பணப்பரிமாற்றம் ஏதும் கிடையாது. இவ்வாறு அவர் கூறினார்.